# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2019.11.18 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# இலங்கை உளவியல் கழகம்
# (கூட்டிணைத்தல்)

**இலங்கை உளவியல் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் அவர்களால்*
*பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 23.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கை உளவியல் கழகம்
## (கூட்டிணைத்தல்)

ச.வ. - ஒ. 30/2011

### இலங்கை உளவியல் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

''இலங்கை உளவியற் கழகம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் பயனுற நிறைவேற்றும் மற்றும் கருமங்களைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன், சொல்லப்பட்ட கழகம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் அமைக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் மற்றும் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக விருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின்       ஆம் இலக்க, இலங்கை உளவியல் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*இலங்கை உளவியற் கழகத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப் பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை உளவியல் கழகத்தின்" தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான

அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டிணைக்கப்பட்ட குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை உளவியல் கழகம் " என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவைகள் ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் நோக்கத்துக்கான கருத்தெல்லைக்குள் வருகின்ற வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதிலும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) இலங்கையில் உளவியல் பற்றிய அறிவையும் மற்றும் அதன் ஏற்புடைமையையும் மேம்படுத்துதலும் பரப்புதலும்;

(ஆ) உளவியல் பற்றிய உயர்தொழில்சார் அறிவை மேம்படுத்தும் நோக்குடன் ஆராய்ச்சியை ஊக்குவித்தல்;

(இ) உறுப்பினர்களின் உயர்தொழில்சார் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதலும் மற்றும் இலங்கையில் உளவியற்றொழிலில் பயன்படுத்தப்படும் கருவிகளினதும் உபகரணங்களினதும் அபிவிருத்தி, தரப்படுத்துகை, பயன்பாடு மற்றும் மதிப்பீடு என்பவற்றில் தகுந்த நியமங்களைப் பேணுதலும்;

(ஈ) உறுப்பினர்களின் உயர்தொழில்சார் அக்கறையைப் பாதுகாத்தலும், அறிவையும் உயர்தொழில்சார் நிபுணத்துவத்தையும் விசாலிப்பதற்கு உதவியளித்தலும்;

(உ) உளவியல் பற்றிய ஆராய்ச்சியிலும், வெளியீட்டிலும் உதவியளித்தலும் மற்றும் இயைபான மூலப் பொருளுக்கான அணுகுகைக்கு வசதியளித்தலும்;

(ஊ) ஒழுக்கவியல்சார் தொழில்புரிகையை மேம்படுத்துவதற்கும், உறுப்பினர்களினதும் உளவியற்றுறையில் சம்பந்தப்பட்டுள்ள ஏனையோரினதும் பிறழ்செயல்களைத் தடுப்பதற்குமென ஒழுக்கவியல் நடத்தைக் கோவையொன்றைத் தாபித்தல்;

(எ) உளவியலின் பல்வேறு துறைகளிலும் மாநாடுகளையும், செயலமர்வுகளையும், விரிவுரைகளையும் ஒழுங்குபடுத்துதலும் மற்றும் வலையமைப்பிடுதல் வசதி வாய்ப்புக்களை ஏற்பாடு செய்தலும்;

(ஏ) உளவியலுடனும் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தொடர்புடைய வெளியீடுகள் பற்றிய குறிப்பீடொன்றைப் பேணுதலும்; அத்துடன்

(ஐ) உயர்தொழில்சார் பணி பற்றிய வாய்ப்புக்களின் மீதான தகவலைப் பரப்புதலும் மற்றும் உளவியலில் விரும்பத்தக்க தகைமைகள் பற்றி உறுப்பினர்களுக்கு விதப்புரைகளைச் செய்தலும்.

அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண்பாடில்லாதிருப்பதனைக் கூட்டிணைக்கப்பட்ட குழு உறுதிப்படுத்துதல்.

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களின் முகாமையும் நிர்வாகமும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான பதவிதாங்குனர்களின் அத்தகைய எண்ணிக்கையினரைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைப் பேரவை ஒன்றினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற கழகத்தின் பேரவையானது, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது பேரவையாக 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்காலப் பேரவையாக இப்பிரிவின் பந்தி (ஆ) வின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) ஏழாம் பிரிவின் ஏற்பாட்டிற்கமைய, இடைக்காலப் பேரவையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகத்திற்காகவும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது பேரவையின் உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கப்படுதற்கும் அல்லது நியமிப்பதற்குமான விதிகளை ஆக்குவதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) இடைக்காலக் குழுவின் ஏதேனும் முடிபானது சமூகமளித்திருக்கும் அதன் உறுப்பினர்களின் பெரும்பான்மை யோரால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) இப்பிரிவின் பந்தி (ஆ) வின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது பேரவையானது இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போசகர்களும் மதியுரைநர்களும் உட்பட, பேரவையின் பதவிதாங்குநர் ஒவ்வொருவரும் மூன்றாண்டு காலப்பகுதி யொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்

படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர் போசகர் அல்லது மதியுரைநர் சொல்லப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதி கழிந்த பின்னர் மீள் நியமனத்துக்கு அல்லது மீள தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரின் இறப்பு, பதவிவிலகுதல், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிட மொன்று ஏற்படும் பட்சத்தில், கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, அதன் விதிகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் எந்த உறுப்பினரை அவர் பின்பற்று கின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் தத்துவங்கள்.*

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, பின்வரும் தத்துவம் உட்பட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்க வாறான எத்தன்மைத்தானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறான காணிகள் அல்லது கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்கும், கொள்ளவும், வாடகைக்கு எடுக்கவும், நிர்மாணிக்கவும், புனரமைக்கவும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அதனைக் கையாளவும் அல்லது கையுதிர்க்கவும்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் சார்பில் எவரேனும் அலுவலரினூடாகவோ அல்லது அதிகார மளிக்கப்பட்ட முகவரினூடாகவோ ஆயினுஞ்சரி ஈடுபடுவதற்கும் மற்றும் புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும்;

(இ) பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப் பின்றியோ நிதிகளைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெற்றுக் கொள்ளுதல்:

ஆயின், பேரவையானது, கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்கு செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ஈ) மாற்றுண்டியல், காசோலைகள் , வாக்குறுதிப்பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல், வாங்குதல், விற்றல் மற்றும் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தல், செயற்படுத்துதல், பேணுதல் மற்றும் மூடுதல்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பு அல்லது ஏதேனும் அசையாத அல்லது தனிப்பட்ட ஆதனம் என்பவற்றை பொறுப் பேற்றலும், ஏற்றுக்கொள்ளுதலும் நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிர்வகித்தலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக் கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும் அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகளை அவர்களுக்குச் செலுத்துதலும்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகள், கருத்தரங்குகள், மாநாடுகளை ஒழுங்கு செய்தல்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும்;

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஆளணியினரைப் பயிற்றுவித்தல்; அத்துடன்

(ஓ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை முறையாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாக் கருமங்களையும் செய்தல்.

**7.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்டமொன்றில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை, காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:- கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகள்.

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், உறுப்பினர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியிலிருந்து நீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களும்:

(ஆ) பேரவையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களின் நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும்;

(ஈ) பேரவையினது அல்லது அதன் ஏதேனும் உபகுழுவினது கூட்டங்களைக் கூட்டுதலிலும் அதனை நடாத்துதலிலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தலும் நிகழ்ச்சி நிரலும் அதற்கான கூட்டநடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(உ) பேரவையினதும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உறுப்பினராக இருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனங்களின் நிர்வாகமும் முகாமையும்; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமையும், அதன் குறிக்கோள்களை எய்துதலும், அத்துடன் கூட்டுத்தாபனத்தைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப் பட்டதைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் மற்றும் அதே போன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெது வும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு.

**8**. பேரவையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்; இதில், உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிதியம்.

**9**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், கட்டணங்கள் அல்லது மானியக் கொடை என்றவகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**10.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ‘‘தகைமைபெற்ற கணக்காய்வாளர்’’ என்பது –

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அக் கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

வருடாந்த அறிக்கை.

**11.** (1) பேரவையானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து சுகாதாரம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறுமாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாக தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

கழகத்தினால் செலுத்தப்பட வேண்டியவையும் கழகத்துக்குச் செலுத்தப்படற்பாலவையுமான தனிசுகள்.

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருக்கும் கழகத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று கழகத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்

பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழு அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**13.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாகவரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்கள் யாவும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்தல்.

**14.** எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும், பங்கிலாபம், மிகையுதியம் அல்லது இலாபம் என்றவகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை.

**15.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, பேரவையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, பேரவையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான பேரவையின் பதவி தாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

*கலைக்கப் பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

**16.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது, ஆனால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடையதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசின் உரிமைகளைப் பேணல்.*

**17.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியற்குழு அல்லது வேறேதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**18.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.